காக, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளைத் துவக்கு வதற்கு, அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

9-10 மணி.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு 22,000 ரூபாய், 25,000 ரூபாய் என்ற விகிதத்தில், பரிசீலனைக்காகவே, அந்தப்பள்ளியைக் கன்சிடர் செய்ய வேண்டும் என்பதற்காகவே செலுத்தப்படுகிற நிதியை அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிச் செலுத்தப்பட்ட அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு, என்ற அடிப்படையில் முன்னுரிமைப் பேச்சே வருகிறது. அந்தப் பணமே செலுத்தாத போது, அவை, அந்தக் குழுவிலே ஆய்வு செய்யப்படுவதில்லை. எனவே, அந்த 25,000 ரூபாய் பணம் செலுத்திய காரணத்தால், உடனே ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், ஓராண்டிற்கு ரூ. 1 இலட்சம் என்ற அளவிற்குப் புதிய ஊதியம் உடனடியாகத் தரவேண்டிய கட்டாய நிலை ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் மிகக் கட்டாயமாக வற்புறுத்தினால், அந்த நிதியைத் திருப்பிச் செலுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும்.

கனியனூர் கிராம உயர் துவக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுதல்.

*3558—திரு. டி. ஆர். கஜபதி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தாலுகா, கனியனூர் கிராமத்தில் உள்ள உயர்துவக்கப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. ஆர். கஜபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு தொகுதியில், கனியனூர் கிராமத்தைச் சுற்றி, பத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளபடியால், அதற்கு அருகிலே, 10 கிலோ மீட்டருக்கு மேலே சென்றால்தான் உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன என்கிற காரணத்தால், அந்தக் கிராமத்தை, உயர்நிலைப்பள்ளி உள்ள கிராமமாக மாற்றித் தர அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 30]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பள்ளியை, உயர் நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டுமானால், ஏறத்தாழ 175 மாணவர்கள் அந்தப் பள்ளியிலே படிக்க வேண்டும். 6, 7, 8 ஆகிய வகுப்புகளில் 175 பேர்கள் படித்தால்தான், உயர்நிலைப் பள்ளியாக ஆக்குவது பற்றி ஆலோசிக்கப்படுகிறது. இந்தப் பள்ளியில் கடந்த ஆண்டில் 6-வது வகுப்பில் 43 பேர்களும், 7-வது வகுப்பில் 27 பேர்களும், 8-வது வகுப்பில் 15 பேர்களும்—ஆக மொத்தம் 85 பேர்கள்தான் படித்தார்கள். அந்தப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாக ஆக்குவது என்று சொன்னால் அதற்கு முன்னுரிமை எந்த வகையிலேயும் எளிதாகக் கிடைக்காது.

திரு. டி. ஆர். கஜபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டில் இல்லையென்றாலும், இந்த ஆண்டு அதிகமான மாணவர்கள் சேர்ந்துள்ளபடியால், மீண்டும் பரிசீலனை செய்து, இந்தப் பள்ளியை, உயர் நிலைப்பள்ளியாக மாற்றித்தர வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாணவர்களை அதிகமாகச் சேர்த்து, மற்ற பள்ளிகளோடு போட்டியிடுமாறு அங்கத்தினர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

கல்வி பயிலத் தேவைப்படும் உபகரணங்கள்

*4305—திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) உயர் நிலைப்பள்ளியில் பயிலும் ஏழை மாணவ, மாணவியர்க்கு கல்வி பயிலத் தேவைப்படும் உபகரணங்கள் அனைத்தையும் இலவசமாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நிலைப்பள்ளியில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு இன்றையதினம் பாடப் புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம், அதைப்போல அவர்களுக்குத் தேவையான 'ஜியாமெட்ரி பாக்ஸ்' போன்ற பொருட்களெல்லாம், இன்றைக்கு மிக அதிக